*10*

# உலகத்தின் வெறுப்புணர்வு

## (யோவான் 15)

*“உலகம் உங்களைப் பகைத்தால், அது உங்களைப் பகைக்கிறதற்குமுன்னே என்னைப் பகைத்ததென்று அறியுங்கள். நீங்கள் உலகத்தாராயிருந்தால், உலகம் தன்னுடையதைச் சிநேகித்திருக்கும்; நீங்கள் உலகத்தாராயிராதபடியினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்து கொண்டபடியினாலும், உலகம் உங்களைப் பகைக்கிறது. ... என்னைப் பகைக்கிறவன் என் பிதாவையும் பகைக்கிறான். வேறொருவரும் செய்யாத கிரியைகளை நான் அவர்களுக்குள்ளே செய்யாதிருந்தேனானால், அவர்களுக்குப் பாவமிராது; இப்பொழுது அவர்கள் என்னையும் என் பிதாவையும் கண்டும் பகைத்துமிருக்கிறார்கள். முகாந்தரமில்லாமல் என்னைப் பகைத்தார்கள் என்று அவர்களுடைய வேதத்தில் எழுதியிருக்கிற வாக்கியம் நிறைவேறும்படிக்கு இப்படியாயிற்று” (வசனங்கள் 18-25).*

இயேசுவின் வாழ்வில் திகைக்கச் செய்யும் அற்புதங்களில் ஒன்று, பின்வரும் கேள்விகளில் உருப்பெற்று உள்ளது: “அவரை உலகம் சிலுவையில் அறைந்தது ஏன்?” அவரை உலகம், திறந்த கரங்களுடனும், “ஆவிக்குரிய சந்தோஷத்துடனும் அவர் கொண்டு வந்து மீட்பிற்காக நித்திய நன்றி உணர்வுடனும் ஏற்றுக்கொள்ளாதது ஏன்?” அவர் பரிபூரணமான நற்தன்மையை எடுத்துக்காட்டி, சத்தியம் என்றால் என்ன என்பதையும் மனிதர் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதையும் நிறைவான வகையில் வாழ்ந்து காட்டியிருந்தும், உலகம் அவரிடம் நிலைநிற்க இயலாது இருந்தது. உலகம் அவரை அறிய வந்தபோது, அவர் யார் என்பதையும் அவர் உலகத்திற்குக் கொண்டு வந்தது என்ன என்பதையும் அது கண்டபோது, அது உடனடியாக அவரை அழிக்க வகை தேடிற்று. இருளானது, உலகிற்கு வந்திருந்த உண்மையான ஒளியை அணைத்துப் போடவே நாடிற்று. இது எவ்வாறு இப்படி ஆக முடிந்தது? நீதியும் பூரணமுமான அன்பின் மீட்பரை எவரொருவரும் புறக்கணிக்க முடிந்தது எவ்வாறு? உலகமானது சத்தியத்திடம் கொண்டிருந்த வெறுப்புணர்வினால் அவரைப் புறக்கணித்தது.

இயேசுவின் மீதான இந்த வெறுப்புணர்வின் உண்மை நிலையும் கொடூரத்தன்மையும், இயேசுவின் மரணத்திற்கு முன்பு மேல்வீட்டில் நடைபெற்ற கலந்துரையாடலில் முக்கியமான தலைப்பாக இருந்தது. கர்த்தர் தமது அப்போஸ்தலர்களை எதிர்காலத்திற்கு ஆயத்தப்படுத்த வேண்டியிருந்தது, தம்மை எதிர்த்து விரைவில் தம்மைச் சிலுவையில் அறைய இருந்த, பிசாசினால் கட்டுப்படுத்தப்பட்ட உலகத்தைச் சமாளிக்க அவர்களுக்கு உதவ வேண்டியதாயிருந்தது. அப்போஸ்தலர்கள் இயேசுவின் ஊழியத்தைத் தொடர்ந்து செய்து அவரது ஊழியத்தை, அவர் இந்த உலகத்தில் வாழ்ந்திருந்தது போன்றே வாழ்வதன் மூலம் முன் எடுத்துச் செல்ல வேண்டி இருந்தது. உலகம்,

அவரை எதிர்த்து நின்றது போன்றே அவர்களையும் வன்மையாக எதிர்த்து நிற்கும், அதற்கு அவர்கள் ஆயத்தமாக இருக்க வேண்டியிருந்தது. யோவான் 15:18-25ல், நமது கர்த்தர், இனி வர இருந்த விஷயங்களைச் சந்திக்க அவர்களை ஆயத்தப்படுத்தினார்.

யோவான் 15ம் அதிகாரத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள மற்ற இரு கலந்துரையாடல்களுடன் இந்தத் தலைப்பிற்கு இயேசு வழிநடத்திச் சென்றார். அவர்கள் கொண்டிருக்க வேண்டியதான, *அவருக்குள் உள்ள ஜீவனைக்* காண்பிக்க, அவர் திராட்சச் செடி மற்றும் அதன் கிளைகள் என்ற உருவகத்தைப் பயன்படுத்தினார். கிளையானது திராட்சச் செடியில் இருந்து ஜீவனைத் தரவழைத்துக் கொள்வது போன்று, அவர்கள் அவருக்குள் தங்கள் ஜீவனைக் கண்டறிவார்கள் (வசனங்கள் 1-8). இந்த உருவகத்தில் இருந்து அவர், அவர்கள் ஒருவர் மற்றவருக்கு வெளிப்படுத்த வேண்டிய *தமக்குள்ளான அன்பு* என்ற விஷயத்திற்குக் கடந்து சென்றார், அந்த அன்பு அவர்களின் சீஷத்துவத்தின் சின்னமாக இருக்க வேண்டி இருந்தது (வசனங்கள் 9–17). அவர்களின் ஜீவனுக்கும் அன்பிற்கும் அவரே ஆதாரமூமாக இருந்தார். பிதாவானவர் அவர் மீது அன்புகூர்ந்தது போலவும் அவர்கள்மீது அவர் அன்புகூர்ந்தது போலவும், அவர்கள் ஒருவர் மற்றவர் மீது அன்புகூர வேண்டி இருந்தது. பின்பு அவர் - அத்தியாவசியமாக - உலகம் அவர்கள்மீது கொண்டுவர இருந்த துன்புறுத்துதல் மற்றும் வெறுப்புணர்வு ஆகியவற்றை அவர்கள் அறியச் செய்தார் (வசனங்கள் 18-25). *அவர் நிமித்தம் வெறுக்கப்பட்டு இருத்தல்* என்ற எதிர்காலத்தை அவர்கள் எதிர்கொள்ள வேண்டி இருந்தது.

அவர் மேல்வீட்டில் கலந்துரையாடிய ஒவ்வொரு தலைப்பும் அவர்களுக்கு மிகவும் முக்கியமானதாக இருந்தது. அவர்கள், இராஜ்யத்தின் தொடக்கத்தினுடைய பகுதியாகுகையில், அவர்களை அவர், மென்மையுடனும், மிகச்சரியான தன்மையுடனும், அவர்களுக்காகக் காத்திருந்த சிரமங்கள் பற்றிய முழு விழிப்புணர்வுடனும் ஆயத்தப்படுத்தினார்.

கிறிஸ்துவின் சீஷராக வேண்டும் என்ற மனதுள்ள எவரொருவரும், தமது புதிய மற்றும் ஆச்சரியமான சாதனைக்குள் தாம் பிரவேசிக்கையில், தம்மைச் சுற்றிலும் இருக்கும் ஒவ்வொருவரும் தம்மை முழுமையாக உற்சாகமூட்டுதலைப் பெற்றிருக்க வேண்டும் என்று நாம் யூகிக்கலாம். சீஷத்துவ வாழ்வு என்பது எவரொருவரும் வாழக்கூடிய மிக உன்னதமான மற்றும் மிகப் பலன் அளிக்கக் கூடிய வாழ்வாக இருப்பதால், இந்த வாழ்வை விரும்புகிற ஆத்துமாவானது, அதைச் சுற்றிலும் உள்ள உலகத்தினால் பெருந்தன்மையான அங்கீகரிப்பையும் உதவியையும் பெற வேண்டாமா? (ஆனால்) செயல்விளைவில் இயேசு தமது அப்போஸ்தலர்களை இதைப்பற்றி எச்சரித்தார், “இல்லை, அது எதிரானதாக இருக்கும். உலகம் உங்களை எதிர்க்கும். நான் வெறுக்கப்பட்டது போன்றே நீங்களும் வெறுக்கப்படுவீர்கள்.” கிறிஸ்துவின் மீது விசுவாசம் நிறைந்துள்ள சீஷர், இயேசு எதிர்கொண்ட அதே எதிர்ப்புக்களை எதிர்கொள்வார் மற்றும் அதற்கு அவர் (சீஷர்) ஆயத்தமாக இருக்க வேண்டும். அவர் பிசாசு, உலகம் மற்றும் மாம்சம் ஆகியவற்றின் வெறுப்பினால் சூழப்படுவார்.

## நீடித்து வாழும் வெறுப்புணர்வு

*கிறிஸ்துவின் சீஷர்களுக்கு எதிரான இந்த வெறுப்புணர்வு, நீண்டகாலத்திற்கு*

*முன்பே தேவனுக்கு எதிராக எழுந்திருந்தது.* இந்த வெறுப்புணர்வின் நித்திய பின்னணியில், தேவனைப் பிசாசு எதிர்த்து நிற்குதல் என்ற விஷயம் உள்ளது. தேவனுடைய பூரணமான சித்தம் என்பது அவனுக்கு எதிரான விஷயமாயிற்று. அதை அவன் வெறுத்தான் மற்றும் அதற்கு எதிராக அவன் கலகம் செய்தான், அவன் தன்னுடன் எண்ணற்ற தூதர்களை எடுத்துச் சென்று, அவர்கள் யாவரும் இப்போது நித்திய நியாயத்தீர்ப்பிற்காகக் காத்திருக்கின்றனர் (2 பேதுரு 2:4). சத்தியம் மற்றும் நீதியின் மூல ஆதாரமான தேவன், தூதர்களும் மனிதர்களும் தங்கள் வளர்ச்சியில், சரியானது எது என்பதைத் தேர்ந்து கொள்வதினால் தங்கள் ஒழுக்க உணர்வைச் செயல்படுத்தும்படி, சரியானது எது என்பதை ஒழுக்க ரீதியாகப் பகுத்து உணருதலை வளர்த்துக்கொள்வதற்காகப் பாவம் இருக்கும்படி அனுமதித்தார்.

பிசாசானவன் தேவனுக்கு எதிராகக் கலகம் செய்தபோது, அவன் பாவத்தை இருக்கச் செய்தான். பாவம் என்பது பிசாசானவனைவிட மிகவும் மோசமானதாக உள்ளது, ஏனெனில் அது பிசாசானவனை அவன் இருக்கும் வண்ணமாக்கிற்று. ஏதேன் தோட்டத்தில் பாவம் பிரவேசித்த நிகழ்வுடன், இந்த "ஆகாயத்து அதிகாரப் பிரபு" (எபேசியர் 2:2) இந்த உலகத்தில் நீதிக்கு எதிரான தனது யுத்தத்தைத் தொடங்கினான். அவன் ஓரளவிற்கு இந்த உலகத்தைத் தனது செல்வாக்கின்கீழ் கொண்டுவந்துள்ளான், அதன் பொக்கிஷங்களையும், அதன் சந்தோஷங்களையும், அதன் மக்களையும் அதன் வல்லமைகளையும் அவன் எடுத்துக் கொண்டுள்ளான்.

எனவே, இயேசுவுக்கு எதிரான வெறுப்புணர்வுக்குப் பின்னால், தேவன் மீதான வெறுப்புணர்வு உள்ளது. நீதி, சத்தியம் மற்றும் நற்தன்மை ஆகியவற்றின் மீதான அவரது அன்பு, பொல்லாங்கின் வல்லமைகளினால் ஒருக்காலும் மதிக்கப்படவோ அல்லது தழுவிக்கொள்ளப்படவோ மாட்டாது. பாவம் என்பது, இருதயம் இனியும் நல்வாழ்வை விரும்பாமல், ஆனால் அதற்கு மாறாக - அதனுடைய பொல்லாத பேராவல்களினால் - உண்மையில் அதை வெறுக்கும்படிக்கு இருதயத்தை முற்றிலுமாகச் சேதப்படுத்த முடியும்.

## இயேசுவைக் குறித்து வெறுப்புணர்வு

*தெய்வீக நற்தன்மையைக் குறித்த இந்த வெறுப்புணர்வானது, இயேசுவின் ஊழியத்தின் போது, அதன் போராட்டத்தின் உச்சத்தை அடைந்தது.* இயேசு பிதாவுடன் ஒன்றாக இருப்பதால், பிதாவின் மீதான வெறுப்புணர்வு, எல்லா சக்திகளிலும் மாபெரும் அளவில் இயேசுவின் மீது இறங்கி வந்தது. அவர் உலகத்திற்கு உண்மையான ஒளியைக் கொண்டுவரும்படி பிதாவினால் அனுப்பப்பட்டிருந்தார். அவரது பூமிக்குரிய வாழ்வில், அவர் உலகத்தை வெற்றிகொள்வதற்காகப் பிதாவின் சித்தத்தினுடைய அவதாரமானார். அவரது நீதியுள்ள வாழ்வு, உலகத்தின் துன்மார்க்கத்தை நியாயந்தீர்த்தது. அவர் தேவனுடைய பண்பை காட்சிப்படுத்துகையில், தேவனுடைய வாழ்வை வாழுகையில், மற்றும் தேவனுடைய நித்திய திட்டத்தை வெளிப்படுத்துகையில், அவர் பொல்லாங்கின் வல்லமையை இதற்கு முன் ஒருபோதும் தூண்டாத அளவிற்குத் தூண்டினார்.

மேல் வீட்டில் இயேசு, பொல்லாங்கை வெற்றிகொள்பவர்களுக்குத் தமது ஊழியம் அர்த்தப்படுத்தியது என்ன என்பதன் உண்மையைத் தமது

*அப்போஸ்தலர்களுக்கு வெளிப்படுத்தினார். அவர் பின்வருமாறு கூறினார்:*

> *வேறொருவரும் செய்யாத கிரியைகளை நான் அவர்களுக்குள்ளே செய்யாதிருந்தேனானால், அவர்களுக்குப் பாவமிராது; இப்பொழுது அவர்கள் என்னையும் என் பிதாவையும் கண்டும் பகைத்துமிருக்கிறார்கள். முகாந்தரமில்லாமல் என்னைப் பகைத்தார்கள் என்று அவர்களுடைய வேதத்தில் எழுதியிருக்கிற வாக்கியம் நிறைவேறும்படிக்கு இப்படியாயிற்று (15:24, 25).*

*கிறிஸ்துவின் நீதியை உலகம் கண்டபோது, அது அவரை எதிர்ப்பதற்குத் தன்னைத் தயார் செய்துகொண்டது.*

*இயேசுவின் செயல்கள், அவர் தேவனுடைய சத்தியமாக இருந்தார் என்பதை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபித்தன. மற்றும் தேவனுடைய இந்த சத்தியமானது, பொல்லாங்கானவை அழிக்கப்பட வேண்டும் என்பதைச் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபித்தது. இயேசு உலகத்திற்குள் பிரவேசித்த காரணத்தினால், போராட்டங்களிலேயே மாபெரும் போராட்டம் - நன்மை மற்றும் தீமை, சத்தியம் மற்றும் தவறு, அன்பு மற்றும் வெறுப்பு ஆகியவற்றிற்கு இடையிலான விரோதம் - எழுந்தது. இயேசு கொண்டு வந்த தெளிவான சத்தியத்தைப் புறக்கணித்தலே மாபெரும் பாவமாக உள்ளது. உலகமானது பொல்லாங்கின் இருளான வல்லமைகளுக்குள் அவற்றிற்காகவே வாழ்ந்தது; இயேசு நம்பிக்கை, நற்தன்மை மற்றும் அன்பு ஆகியவற்றின் ஒளிமிகுந்த வல்லமைகளுக்குள் அவற்றிற்காகவே வாழ்ந்தார். இயேசுவின் ஒளி உலகத்தின் மீது பிரகாசிக்கையில், பொல்லாங்கின் வல்லமைகள் அதை பலத்த வல்லமையுடன் எதிர்த்து நின்றன. ஒளியானது பாவத்திற்கு மரணத்தை அதிகாரத்துடன் அறிவித்தபடியால், பாவம் நிறைந்த உலகமானது ஒளியை வெறுத்தது, ஒளியைப்புறக்கணித்தது மற்றும் ஒளியை அழிக்கும்படித் தனது கையை உயர்த்திற்று. தீவிரமான வெறுப்புணர்வு, இயேசுவுக்கு எதிராக "மரணத்திற்கான ஒரு போராட்டத்தை" தூண்டிற்று. அவரது பரிபூரணமான வாழ்வானது ஒரு தீர்மானத்தைக் கட்டாயப்படுத்தியது. இந்த யுத்தகளத்தில் எவரொருவரும் நடுநிலை வகிக்க இயலாது, ஒவ்வொரு நபரும், அவரை அன்புகூர வேண்டும் அல்லது வெறுக்க வேண்டும், அவருக்கு ஊழியம் செய்ய வேண்டும் அல்லது அவரைச் சிலுவையில் அறையவேண்டும், அவரை ஆராதிக்க வேண்டும் அல்லது அவரது வல்லமையைப் பிசாசினுடையது என்று கருத வேண்டும்.*

*உலகமானது அவரது செயல்களைக் கண்ட உடனே. யுத்தம் ஊக்கமாகத் தொடங்கிற்று. அவரது செயல்கள் ஒப்புக்கொள்ளப்பட அல்லது எதிர்த்து நிற்கப்பட வேண்டியவையாக இருந்தன. எதிர்த்து நிற்குதல் என்பதே பொல்லாங்கின் தேர்வாக இருந்தது. இயேசு யார் என்பதையும் அவர் செய்தது என்ன என்பதையும் இருளான உலகம் கண்டு, அவரை அழிக்கும்படி தன்னைத் தயார் செய்துகொண்டது. இயேசு, "அவர்கள் என்னைக் காரணமின்றி வெறுத்தனர்" என்று கூறினார். அவர், சத்தியம், ஜீவன் மற்றும் அன்பு என்பவற்றைத் தவிர வேறொன்றுமாக இருக்கவில்லை; அவருக்குள் பாவம் இருக்கவில்லை. இயேசுவை எதித்தவர்கள் அவ்வாறு செய்வதற்குக் காரணம் எதுவும் கொண்டிருக்கவில்லை. ஒளியைத் தேர்ந்து கொள்வதற்கு மாறாக இருளைத் தேர்ந்து கொள்ளுவதற்கான அவர்களின் விருப்பத்தில் இருந்தே,*

இயேசுவிற்கு எதிரான எல்லா எதிர்ப்பும் எழுந்தது. இயேசுவின் தொடர்பாக இதுவே விஷயமாக இருந்தது, மற்றும் பொல்லாங்கினால் ஆளப்பட்டு வழிநடத்தப்படும் இந்த உலகத்தில் இதுவே எப்போதும் விஷயமாக இருக்கும்.

## இயேசுவைப் பின்பற்றுபவர்களிடத்தில் வெறுப்புணர்வு

*கிறிஸ்துவைப் பின்பற்றுபவர் என்ற வகையில் சீஷர், கிறிஸ்துவின் மீது விழுந்த வெறுப்புணர்வின்கீழ் வருகிறார்.* பிதாவைப் பொறுத்த மட்டில் உண்மையாக உள்ளது எதுவோ, அது இயேசுவைப் பொறுத்தமட்டிலும் உண்மையாக உள்ளது; மற்றும் எஜமானராகிய இயேசுவைப் பொறுத்த மட்டில் உண்மையாக இருந்தது எதுவோ, அது அவரைப் பின்பற்றும் எந்த சீஷரைப் பொறுத்த மட்டிலும் உண்மையாக உள்ளது. இயேசுவைச் சிலுவையில் அறையும்படி வழிநடத்திய வெறுப்புணர்வு, பல்வேறு சமயங்களில் பல்வேறு வழிகளில், இயேசு வாழ்ந்தது போன்று மற்றும் ஊழியம் செய்தது போன்று வாழ்கிற மற்றும் ஊழியம் செய்கிற சீஷர்மீதும் விழும். அவர் உலகத்தில் இருந்தது போன்று வாழ்கிற மற்றும் ஊழியம் செய்கிற சீஷர்மீதும் விழும். அவர் உலகத்தில் இருந்தது போன்றே, சீஷரும் உலகத்தில் இருப்பார். இயேசு பின்வருமாறு கூறினார்:

> உலகம் உங்களைப் பகைத்தால், அது உங்களைப் பகைக்கிறதற்குமுன்னே என்னைப் பகைத்ததென்று அறியுங்கள். நீங்கள் உலகத்தாராயிருந்தால், உலகம் தன்னுடையதைச் சிநேகித்திருக்கும்; நீங்கள் உலகத்தாராயிராதபடியினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்துகொண்டபடியினாலும், உலகம் உங்களைப் பகைக்கிறது. ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்லவென்று நான் உங்களுக்குச் சொன்ன வார்த்தையை நினைத்துக்கொள்ளுங்கள். அவர்கள் என்னைத் துன்பப்படுத்தினதுண்டானால், உங்களையும் துன்பப்படுத்துவார்கள்; அவர்கள் என் வசனத்தைக் கைக்கொண்டதுண்டானால், உங்கள் வசனத்தையும் கைக்கொள்ளுவார்கள். அவர்கள் என்னை அனுப்பினவரை அறியாதபடியினால் என் நாமத்தினிமித்தமே இவைகளையெல்லாம் உங்களுக்குச் செய்வார்கள் (15:18-21).

இயேசுவின்அப்போஸ்தலர்களை உலகம் பகைத்தால், அதைப் பற்றி அவர்கள் திகைப்பு அடையக்கூடாது, ஆனால் இந்த பகைமை உணர்விற்கான காரணத்தை உய்த்துணர வேண்டும் என்று அவர்களுக்கு இயேசு கூறினார். நாம் இப்படிப்பட்ட பகை உணர்வை எதிர்கொள்ளும்போது, நாம் கிறிஸ்துவுக்கு உரியவர்களாக இருப்பதால் நாம் வெறுக்கப்படுகிறோம் என்பதை நாம் உணர்ந்து அறியவேண்டும். நம்மை எதிர்ப்பவர்கள், பிதாவையோ அல்லது பிதாவானவர் உண்மையில் இந்த உலகத்தில் என்ன செய்துகொண்டுள்ளார் என்பதையோ அறியாதிருக்கின்றனர் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். இயேசுவின் அப்போஸ்தலர்கள் உலகத்தின் பகுதியாக நிலைத்திருந்தால், உலகம் அவர்களை வெறுத்திருக்காது. உலகம் தனக்குச் சொந்தமானவர்களை ஒருக்காலும் வெறுப்பதில்லை. அது ஏன் வெறுக்க வேண்டும்? (காண்க 15:19). இருப்பினும் கர்த்தர் அப்போஸ்தலர்களை இந்த உலகத்தில் இருந்து வெளியே அழைத்து, பின்பு பாவிகளுக்கு ஜீவனையும் சத்தியத்தையும் அளிப்பதால்

உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி அவர்களைத் திரும்பவும் உலகத்திற்குள் அனுப்பியபோது, உலகமானது அப்போஸ்தலர்களுக்கு எதிரான யுத்தத்தைத் தொடங்கிற்று. கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள், தங்கள் எஜமானர் எதிர்கொண்டவற்றை ஓரளவிற்கு எதிர்கொள்வார்கள். "அவர்கள் என்னைத் துன்பப்படுத்தினதுண்டானால், உங்களையும் துன்பப்படுத்துவார்கள்" என்று இயேசு கூறினார் *(15:20)*.

இயேசுவைப் பின்பற்றுபவர்கள் உலகத்திற்குக் கொண்டு வரும் செய்தியை உலகத்தில் உள்ள எவராவது கவனிப்பாரா? ஆம் ஒருசிலர் கவனிப்பார்கள். கர்த்தர், "அவர்கள் என் வசனத்தைக் கைக்கொண்டதுண்டானால், உங்கள் வசனத்தையும் கைக்கொள்ளுவார்கள்" என்று கூறினார். ஒருசிலர் இயேசுவை ஏற்றுக்கொண்ட போன்றே, ஒருசிலர் அப்போஸ்தலர்களின் உபதேசங்களை ஏற்றுக் கொள்வார்கள். இன்றைய நாட்களில் வசனம் பிரசங்கிக்கப்படுகிறபோது, ஒருசிலர் அதற்குப் பதில் செயல் செய்வார்கள். இருந்தபோதிலும், உலகமானது அகழ்ந்தெடுத்துள்ள தனது எல்லாத் துன்மார்க்கத்துடனும், தனது பொல்லாத வழிகளுடனும் மற்றும் பேராவல்களுடனும், மனந்திரும்பாத நிலையில் இருக்கும். அது எப்போதுமே தனக்குச் சொந்தமானவற்றைப் பாதுகாக்கும் செயலில், தன்னைத் திருத்தி ஒளியினிடம் கொண்டுவரும் எந்த விஷயத்தையும் தாக்கும் நிலையில் இருக்கும்.

## முடிவுரை

சீஷர்கள் உலகத்திற்குத் திரும்பச் சென்று உலகத்தை அதிலிருந்தே மீட்கும்படி திரும்ப அனுப்பப்படுவதற்காக, உலகத்தில் இருந்து வெளியே கொண்டுவரப்பட்டு மீட்கப்பட்டுள்ளனர். இயேசு தமது சீஷர்களை அனுப்பியுள்ளார், நாம் செல்ல வேண்டும். நாம் அன்பில் செல்ல வேண்டும், ஆனால் நாம் செய்பவற்றிற்காக நாம் வெறுக்கப்பட்டு பழித்துரைக்கப் படலாம். சிலர் சத்தியத்திடம் வருவார்கள், சிலர் அதைப் புறக்கணிப்பார்கள், மற்றும் பிறர் அதை வெறுத்து எதிர்த்து நிற்பார்கள். வெறுக்கப்படுவதை எந்த சீஷரும் விரும்புவதில்லை, ஆனால் மீட்பின் செய்தியான சுவிசேஷம் - அடிக்கடி வன்முறையான இறுமாப்புடன் சந்திக்கப்பட்டாலும் அந்தச் செய்தி இந்த உலகத்திற்கு முன்வைக்கப்பட வேண்டும் என்பதை நாம் அறிகிறோம்.

---

*"நான் உம்முடைய வார்த்தையை அவர்களுக்குக் கொடுத்தேன்; நான் உலகத்தானல்லாததுபோல அவர்களும் உலகத்தாரல்ல; ஆதலால் உலகம் அவர்களைப் பகைத்தது. நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளும்படி. நான் வேண்டிக்கொள்ளாமல், நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன். நான் உலகத்தானல்லாததுபோல, அவர்களும் உலகத்தாரல்ல. உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம். நீர் என்னை உலகத்தில் அனுப்பினதுபோல, நானும் அவர்களை உலகத்தில் அனுப்புகிறேன். அவர்களும் சத்தியத்தினாலே பரிசுத்தமாக்கப்பட்டவர்களாகும்படி, அவர்களுக்காக நான் என்னைத்தானே பரிசுத்தமாக்குகிறேன்" (யோவான் 17:14-19).*

*"உலகம் தனது கடவுளைக் கொண்டுள்ளது; தனது மதத்தைக் கொண்டுள்ளது,*

*அது ஏதேன் தோட்டத்து வாசல்களில் காயீனால் முதன் முறை லாக நிறுவப்பட்டது; அவனே அதன் இளவரசன் மற்றும் நீதிமன்றம், மற்றும் சட்டங்கள்; அதன் கோட்பாடுகள் மற்றும் கொள்கைகள்; அதன் இலக்கியங்கள் மற்றும் சந்தோஷங்கள் ஆகிய யாவும் அங்கே நிறுவப்பட்டன. அது, அப்போஸ்தலர் இச்சை அல்லது உலகவழக்கம் என்று அழைக்கும் தனிப்பட்ட ஆவியால் ஆளுகை செய்யப்படுகிறது (1 யோவான் 2:15, 16), ... அது ஒரு தொற்றாக, ஒரு செல்வாக்காக, ஒரு ஆரவாரக் காட்சியாக, மாயக்கவர்ச்சியாக உள்ளது; அது நமக்கு, தங்களுக்குள் இரும்பைக் கொண்டிருந்த கப்பல்களைத் தன்னை நோக்கி இழுக்கும் சுமைகல்லின் திகைக்க வைக்கும் மலையை நினைவுபடுத்துகிறது, மற்றும் அது இப்போது, கப்பலின் முழுபாகமும் உதவியற்றதாகும்படி, அது அலைகளில் உருவமற்ற கனத்த பொருளாகும்படி, அதன் மரவேலைகளில் இருந்து ஆணிகளை இழுத்துக்கொண்டுள்ளது. உலகத்திற்குக் கட்டுப்பட்டவர்கள் (அதை வழிபடுவர்கள்) தங்களையே, உணர்வுகளின் கருப்பொருட்களுடன், தற்காலிகமாகக் காணப்படும் விஷயங்களுடன் இணைத்துக் கொள்கின்றனர். அவர்கள் ஏழ்மை, துன்புறுதல் மற்றும் சிறுமைப்படுதல் ஆகியவற்றின் உச்சகட்டப் பயங்கரத்தைக் கொண்டுள்ளனர்; இவற்றை இவர்கள் (கிறிஸ்துவினுடையவர்கள்) தங்கள் பிரதான பொல்லாங்குகளாக, எந்த விலை கொடுத்தும் தவிர்க்கப்பட வேண்டியவையாகக் கருதுகின்றனர், அதே வேளையில் அவர்கள் (உலகத்தார்) இவற்றைத் தங்கள் பிரதான நன்மையாக, செல்வமாக, சந்தோஷமாக மற்றும் கவனத்திற்குரியதாக மதிக்கின்றனர்.”*[1]

குறிப்பு

[1]F. B. Meyer, *Gospel of John* (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1950), 275-76.